செ.வெ.எண்.472 நாள்: 11.08.2023

**பத்திரிக்கைச் செய்தி**

நீலகிரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் உதகை மு.பாலாடா ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர் தற்காலிகமாக தேர்வுசெய்தல் .

தமிழ்நாடு பழங்குடியினர் நல உண்டி உறைவிட பள்ளி கல்விச் சங்கத்தின் கீழ் செயல்படும் நீலகிரி மாவட்டம் மு.பாலாடா ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளியில் கீழ்கண்டவாறு முற்றிலும் தற்காலிகமான தொகுப்பூதிய பட்டதாரிஆசிரியர் மற்றும் முதுகலைபட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. காலியாக உள்ள பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**<u>பட்டதாரிஆசிரியர் பணியிடங்கள்:</u>**
தமிழ்-1,ஆங்கிலம்-1,கணிதம்-2,அறிவியல்-2,சமுகஅறிவியல்-1.

**<u>முதுகலைபட்டதாரிஆசிரியர் பணியிடங்கள்:</u>**
வரலாறு(கணிதம்)-1,புவியியல்(உயிரியல்)-1

**<u>கல்விதகுதி</u>**
பட்டதாரி ஆசிரியருக்கு சம்பந்தப்பட்ட பாடப்பிரிவில் இளங்கலை பட்டபடிப்பு (U.G) மற்றும் கல்வியியல் பட்டபடிப்பும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். முதுகலை பட்டதாரி ஆசிரியருக்கு சம்பந்தப்பட்ட பாடப்பிரிவில் முதுகலைப்பட்ட படிப்பு(P.G) மற்றும் கல்வியியல் படிப்பும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வரையறுக்கப்பட்ட கல்வித்தகுதிகளுடன் ஆசிரியர் தகுதிதேர்வில் TET தேர்ச்சி பெற்று கற்பிப்பதில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**இனம்:** பழங்குடியினருக்கு முன்னுரிமைஅளிக்கப்படும்.

**சம்பளம்:** பட்டதாரி ஆசிரியர்களுக்கான மாத சம்பளம் ரூ.15000/-மும் முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.18000/-வீதம் தொகுப்பூதியம் வழங்கப்படும்.

மேற்கண்ட பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் 18.08.2023 மாலை 5.00 மணிக்குள் மாவட்டம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலஅலுவலர் கூடுதல் மாவட்ட ஆட்சியர் வளாகம் பிங்கர் போஸ்ட் உதகை 643006 என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்**